திருவள்ளுவராண்டு 2034, புரட்டாசி
ரூ. 3.50

மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய திங்களிதழ்



அன்பிற்கு முண்டோ அழிவு?

'வெற்றி செயலுக்குண்டு விதியி னியமமென்று
கற்றுத் தெளிந்தபின்னும் – கிளியே கவலைப் படலாகுமோ?
துன்ப நினைவுகளும் சோர்வும் பயமுமெல்லாம்
அன்பி லழியுமடீ – கிளியே அன்புக் கழிவில்லை காண்'

– மகாகவி பாரதியார்

சிறப்பாசிரியர் : தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய திங்களிதழ்

விளம்பரக் கட்டணம்

விவரம்	அளவு	1 வெளியீடு	12 வெளியீடு
பின் அட்டை வெளிப்புறம்	1 பக்கம்	ரூ. 750	ரூ. 7500
அட்டை உட்புறம்	1 பக்கம்	ரூ. 650	ரூ. 6500
இதழ் உட்புறம்	1 பக்கம்	ரூ. 500	ரூ. 5000
இதழ் உட்புறம்	1/2 பக்கம்	ரூ. 350	ரூ. 3500

சந்தா விவரம்

தனி இதழ்	ரூ. 3-50
ஆண்டுச் சந்தா	ரூ. 40-00
ஆயுட் சந்தா	ரூ. 400-00
புரவலர் கட்டணம்	ரூ. 1000-00

சந்தா - விளம்பரம் அனுப்பவேண்டிய முகவரி

நிர்வாகி,

மக்கள் சிந்தனை

குன்றக்குடி - 630 206

தொலைபேசி எண். 04577 - 264227

ஆசிரியர்

மரு. பரமகுரு

அச்சிட்டு வெளியிடுவோர்

சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி.

மக்கள் சிந்தனை

நிறுவனர் : தவத்திரு குன்றக்குடி அடிகளார்

திருவள்ளுவராண்டு 2034 மாதம் : புரட்டாசி
மலர் : 15 இதழ் : 9

பாரதிக்குச் செய்கின்ற அஞ்சலி!

"அக்னிக் குஞ்சொன்று கண்டேன்! - அதை
அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்!
வெந்து தணிந்தது காடு!"

என்றான் பைந்தமிழ்த் தேர்ப்பாகன் பாரதி! பாரதி என்ற எரிமலையிடமிருந்து விடுதலைக்கான வேள்விக்கனல் தமிழகம் முழுதும் பற்றவைக்கப்பட்டது! அடிமை இந்தியாவிலிருந்து ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டதாய் ஆனந்தப் பள்ளுப் பாடியவன் பாரதி! தேசத்தின் அடிமைத் தளையை அறுப்பது மட்டுமே அரசியல் தலைவர்களின் கனவாக இருந்தது. மனிதத்தின் அடிமைத் தளைகளாகிய வறுமை, ஏழ்மை, கல்லாமை, தீண்டாமை இவைகளையும் அறுப்பதே பாரதியின் இலட்சியமாக இருந்தது.

பாரதி கஞ்சி குடிப்பதற்கு வழியில்லாத மக்கள் அதன் காரணங்களை அறியாதது கண்டு கலங்கிக் கண்ணீர் வடித்தான்! பஞ்சத்தின் காரணம் அறியாத பாமரமக்களை எண்ணி எண்ணிப் பதைபதைத்தான். தேசத்தின் விடுதலைக்கு முன்பே சமூகத்தின் விடுதலைக்கும் விடிகாலைச் சங்கினை எடுத்து ஊதினான். மனிதர்களுக்கு விடுதலை இல்லாமல் மண்ணின் விடுதலை

அர்த்தமற்றது என்பது அவன் ஆன்மாவின் துடிப்பு. கண்ணிரண்டையும் விற்றுச் சித்திரம் வாங்கிக் கைகொட்டி சிரிக்கப் பாரதிக்கு விருப்பமில்லை. கவிதை அவனுக்கு ஜீவனம் அல்ல; ஜீவன்! எழுத்து அவனுக்குத் தொழில் அல்ல; தவம்! அவன் எழுதுகோலுக்குள் தமிழ்த்தாய் தவம் இருந்தாள்!

ஒரு அவையில் இருவர் உரையாற்றுகின்றனர். ஒருவன் தலையில் பிறந்தவன்; மற்றவன் தோளில் பிறந்தவன்; இன்னொருவன் இடையில் பிறந்தவன்; பஞ்சமன் அவன் எங்கே பிறந்திருப்பான்? என்று அந்த இருவர் பேசிக்கொண்டிருந்த நேரத்தில் அறைக்குள் பாரதி நுழைகின்றான்; பாரதி சொல்கின்றான், "அவன்தான் அவன் அப்பனுக்குப் பிறந்தவன்" என்று! ஒரு நாள் பாரதி, கனகலிங்கத்திற்கு பூணூல் பூட்டினான்! வேதத்திற்கே அன்றுதான் பூணூலின் அர்த்தம் புரிந்தது. "கனகலிங்கம்! இன்று முதல் உன்னை நீ, பிராமணன் என்று பேசு! பிராமணன் என்பவன் பிறப்பவன் அல்லன்; அது வாழ்க்கையை வைத்து வரையறுப்பது! பிராமணன் என்பதை நிறுக்கும் தராசு; பிறப்பில் இல்லை; இறப்பில் இருக்கிறது!" என்று கூறி மனித உரிமை மறுக்கப்பட்ட சமூகத்தைச் சார்ந்த கனகலிங்கத்திற்கு பூணூல் அணிவித்துப் புரட்சியை ஏற்படுத்திய ஒரு கவிஞன் பிராமணன்! அவனால் ஓர் அரிஜன் பிராமணன் ஆனான். மனிதர்களைக்கூட மறுதலித்த சமூகத்தில் "காக்கை குருவி எங்கள் சாதி" என்று; எல்லா உயிர்க்குலத்தையும் மனித குலத்தோடு சமப்படுத்திப் பார்த்தவன் பாரதி!

செப்பும் மொழி பதினெட்டு உடைய தேசமாக இருந்தாலும், சிந்தனையால் இந்தியா என்ற ஒரே தேசமாக இருக்கட்டும். கங்கையையும் காவிரியையும் இணைக்கின்ற தேசிய நீரோட்டமே அவன் விழிகளின் நீரோட்டமாக அமைந்திருந்தது. "மாதர்தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்" என்ற பாரதியின் பெண் உரிமைப் பார்வை எவ்வளவு பெரிய தொலைநோக்குப் பார்வை! உடன்கட்டை ஏறுதல்

சட்டமாக்கப்பட்டு தடுக்கப்பட்டு விட்டது. ஆனாலும் இன்றும் பெண்கள் உயிரோடு கொளுத்தப்படுகின்றனர். வெட்டியான்களாகப் பல கணவர்மார்களே மாறிவிடுகின்றனர். பத்து வயதிலேயே சமையற்கலையில் தாயிடம் பாராட்டுப் பெற்ற பெண் குழந்தை கணவன் வீட்டில் சமைக்கும்போது சமைக்கத் தெரியாமல் வெடி விபத்துக்கு ஆளாகின்றாள்! இந்த மண்ணை மூடி மறைத்துக்கொண்டிருக்கும் வரதட்சணைக் கொடுமைகள் விடைபெறும்பொழுதுதான் உண்மையான பெண் உரிமைச் சமூகம் மலரும்.

பாரதி, கடவுளை நம்புகின்ற கவிஞன்! அதைப் போலவே மானுடத்தையும் நம்புகின்றவன். பாரதி, விநாயகப் பெருமானிடம் கை ஏந்தி நிற்கின்றான், தனக்காக அல்ல; உயிர்க்குலத்தின் நன்மைக்காக! "இந்த மண்மீதுள்ள மக்கள், பறவைகள், விலங்குகள், பூச்சிகள் யாவும் என் வினையால் இடும்பை தீர்ந்து இன்னருள் பெற அங்ஙனம் ஆகுக. அருள்புரிக தேவ தேவா!" என்று விநாயகப் பெருமானிடம் கைஏந்தி நிற்கின்றான். உயிர்க்குலத்தின் நன்மைகூட இறை அற்புதத்தால் மட்டும் நிகழ்ந்துவிடக் கூடாது, மனித முயற்சியால் நிறைவேற வேண்டும் என்பதுவே பாரதியின் பிரார்த்தனை!

பாரதியின் சொர்க்கம் விண்ணில் முளைத்த கண்ணுக்குக் காணாத இடம் அல்ல; வாழும் உலகமே பாரதியின் சொர்க்கம்! இந்த உலகத்தை அமரர் உலகம் ஆக்கவேண்டும் என்றுதான் பாரதி ஆசைப்பட்டான். பாரதியின் தவம் உழைப்பு! பாரதியின் தெய்வம் கைவருந்தி உழைப்பவர்! பாரதி நம்மை தேடிக்கொள்ளச் சொன்ன புண்ணியம், 'ஏழைக்கு எழுத்தறிவித்தல்!, விலங்குகளை மனிதர்களாக்குவோம்! மண் உலகத்தை விண் உலகமாக்குவோம்!' இதுவே பாரதிக்குச் செய்கின்ற கைம்மாறு! கவிமகாராசனுக்கு ஆற்றுகின்ற அளப்பரிய மனிதநேயத் தொண்டால் அஞ்சலி செலுத்துவோம்!

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

திருக்குறள் உரை

(தவத்திரு குன்றக்குடி அடிகளார்)

31. வெகுளாமை

வெகுளி - அழுக்காறு, அவா, பொய் இவற்றின் காரணமாகப் பிறப்பது, அழுக்காறு, அவா, பொய் இவற்றிற்குக் காரணம் உடைமை, அதிகாரம், புகழ் முதலியன. இம்மூன்றினையும் துறத்தலே துறவு. இதனால் வாய்மை, துறவின் ஒரு பகுதியாம். இன்றைய துறவுமுறை துறக்க வேண்டியன துறவாமையும் துறக்க வேண்டாதன துறத்தலுமாக மாறுபட்டு இருக்கின்றது.

ஒருவன் மீது சினம் கொள்வதற்குரிய காரணங்கள் இருப்பினும் சினங் கொள்ளுதலைத் தவிர்த்தல். வாய்மையுடையோர் வெகுளல் செய்யார்.

செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்
காக்கின்என் காவாக்கால் என். (301)

சினங் காக்கக் கூடிய எளிய இடத்தில் சினத்தைக் காட்டாது, அருளால் தடுத்துக் கொள்பவனே சினத்தைத் தடுத்துக் கொள்பவன் ஆவான். அங்ஙனம் இல்லாது வலிமையான இடத்தில் சினம் வராது காத்துக்கொண்டால் என்ன? சினத்தைக் காக்காவிடில் தான் என்ன?

வலிய இடத்தில் காட்டப் பெறும் சினத்தால் சினம் காட்டுபவருக்குக் கேடு உண்டாகும். ஆதலால் சினம் உரியவர் முயற்சியின்றியே அடங்கும். அதனால் சினம் காத்தல் என்னும் தன் முயற்சி இல்லை.

செல்லா இடத்துச் சினந்தீது செல்லிடத்தும்
இல்அதனின் தீய பிற. (302)

ஒருவனது சினம் அது தாக்க முடியாதவர் மேல் எழுமாயின் தனக்கே தீங்காம். சினம் தாக்கக்கூடிய இடத்தில் எழுமாயினும் தீமையைத் தவிர வேறில்லை.

செல்லிடத்துச் சினம் காட்டலால் இம்மையும் மறுமையும் துன்பம் விளையும்; பெருமையும் குன்றும்.

மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்தல் அதனான் வரும். (303)

எத்தகையோரிடத்தும் சினம் கொள்ளுதலைக் கருதவும் செய்யற்க. அதனால் பல்வகையான தீமைகள் உண்டாகும்.

வெகுளி, தீமைகளின் பிறப்பிடம் என்றவாறு, சினம் காட்டப்பட்டோர் எளியோராயினும் மறைவாகவாவது தீமை செய்ய வன்மம் கொள்வர். ஆதலால் "யார் மாட்டும்" என்றார்.

நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ பிற. (304)

முகத்தின் மலர்ச்சியையும், அகத்தின் மகிழ்ச்சியையும் கெடுத்தெழுகின்ற சினத்தைத் தவிர வேறு பகைகளும் உண்டோ? இல்லை.

சினத்தின் விளைவு பகை. பகை வந்திடின் இம்மையும் மறுமையும் துன்பமே விளையும்.

தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம். (305)

ஒருவன் தனக்குத் துன்பம் வராமல் காத்துக்கொள்ள விரும்புவானாயின் சினம் வராமல் காத்துக்கொள்வானாக. அங்ஙனம் சினம் வராமல் காத்துக்கொள்ளானாயின் அச்சினமே கொல்லுதல் நிகர்த்த கொடிய துன்பங்களைத் தரும்.

சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும். (306)

சினம் என்னும் நெருப்பு, தம்மைச் சேர்ந்தாரையும் தம்மைத் துன்பக் காலத்தில் தப்புவித்து பாதுகாத்நவரையுமே சுடும்.

சினம் நெருப்பாகும். ஒரோவழி புறநிலையில் காட்டப்படுவது மட்டுமின்றி, அகநிலையில் எரிந்துகொண்டிருக்கும். ஆதலால் சினம், நெருப்பாயிற்று.

சினத்தால் தாம் கெடும்போது பாதுகாக்கக்கூடிய இனத்தாரையும் சுட்டுவிடுவதால் பாதுகாப்பே இல்லாத நிலையில் தனிமைப்படுத்தப்படுகிறார் என்பதாயிற்று.

சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று. (307)

சினத்தைத் தனது ஆற்றலுணர்த்தும் சிறந்த பண்பென்று பொருட்படுத்தின், அதைக் கொண்டவன் கெடுதல், நிலத்தின்கண் அறைந்தவனுடைய கை தப்பாது நோவுறுதல் போன்றது.

சினத்தினைக் காட்டி, மற்றவர்க்குத் தொல்லை தருதல் பெருமை என்று கருதுதல் வளர்ச்சியில்லாத உலகியல் வழக்கு.

இணர்எரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று. (308)

கொத்தான நாவுகளுள்ள பெருந்தீ வந்து சுட்டாற் போன்ற தீங்குகளை ஒருவன் தொடர்ந்து செய்தானாயினும் இயலுமாயின் அவனைச் சினவாமை நன்றாம்.

எரியும் நெருப்பைவிடச் சினத்தீ கொடிது என்றவாறு. எரியும் நெருப்பு, புறப்பொருளை மட்டுமே அழிக்கும். சினத்தீ பொருள்களையும் பண்புகளையும் ஒருசேர அழிப்பது.

கொடிய துன்பத்தை அனுபவிக்கும் நிலையில் சினத்தைத் தவிர்த்தல் எளிதில் கைகூடாது. முடிந்தால் அதனில் சிறப்பு வேறு ஒன்றும் இல்லை.

உள்ளிய தெல்லாம் உடனெய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி எனின். (309)

தவம் செய்கிறவன் தன் மனத்தால் சினத்தை ஒருபோதும் கருதாதிருப்பான் எனின், அவன் பெறக்கருதிய பேற்றையெல்லாம் ஒருங்கே பெறுவான்.

புறத்தே சினம் காட்டாதவர்களும் கூட உள்ளத்தில் சினத்தைக் கொள்ளுதல் கூடும் என்பது கருத்து.

உள்ளத்தில் சினம் இருந்தாலும் உறவுகளில் செழிப்பு இருக்காது. இதனால் யாரிடமிருந்தும் உதவி பெற முடியாது. மேலும் உள்ளத்தில் சினமிருப்பின் புழுக்கமும் உறுத்தலுமிருக்கும்; முயற்சிகளின் முனைப்பும் மழுங்கும். அதனால் நினைத்ததை அடைதல் அரிது என்ற கருத்தை விளக்க உள்ளத்திலும் சினம் கொள்ளாதவர்கள் நினைத்தெல்லாம் அடைவர் என்றார்.

இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை. (310)

எல்லைகளைக் கடந்த சினத்தைக் கொண்டவர்கள் உயிரோடிருக்கினும் செத்தவரை ஒப்பர். சினத்தினை முற்றாகத் துறந்தவர்கள் முற்றத் துறந்தவர்களாவர்.

பொன், பொருள், பூவையர், புகழ் முதலிய பற்றுக்களே சினத்திற்குக் காரணமாதலால், சினத்தினைத் துறந்தார் எனில் சினத்திற்குக் காரணமான பற்றுக்களையும் துறந்தார் என்பது உய்த்தறியக் கூடியது.

(தொடரும்)

திருவெம்பாவை உரை

(தவத்திரு பொன்னம்பல அடிகளார்)

18. அண்ணாமலையான் அடிக்கமலம்

தேவர்கள் அணிந்திருக்கின்ற மணிமுடிகளில் ஒளி வீசுகின்றது. தேவர்களின் மணிமுடிகளில் உள்ள நவரத்தினங்கள் அற்புத ஒளியை வீசிக்கொண்டிருக்கினறன. தேவ் தேவனின் திருவடிகளின் முன்பு அந்த மணிமுடிகளின் கற்கள் ஒளி இழந்து காணப்படுகின்றன. அமுதம் உண்ட செருக்கால் விண்ணவர்களின் தலையில் அகங்காரம் உண்டாயிற்று. அறிவு, அகங்காரம் என்ற இரண்டும் உடையவரிடம் தம்மைவிட மேம்பட்டவர் யாரும் இல்லை என்ற எண்ணம் குடியிருத்தலால் அவர்கள் முடிமணிகள் ஒளிவீசுகின்றன. இது எவ்வளவு நேரம்? இறைவன் திருவடியைச் சென்று அடைகின்றவரை இந்நிலை நீடிப்பது உண்மைதான்! திருவடியின் அருள் ஒளியின் முன்பு, இவர்களின் ஆணவம் அழிக்கப்பட்டு, ஒளியிழந்து நிற்பதை அழகிய உவமை மூலம் விளக்குகின்றார் அடிகளார்.

இரவில் விண்மீன்கள் ஆட்சி! காரிருளில் ஆகாயச் சேலையில் ஆயிரம் மின்மினிகள்! இப்பொழுது உதய வானில் ஒளி தோன்றுகின்றது. உதய ஞாயிற்று ஒளி உச்சம் அடைகின்ற பொழுது விண்மீன்கள் கரைந்து காணாமல் போய்விடுகின்றன. இறைவனின் பேரொளியின் முன்பு அஞ்ஞான ஆணவ இருள் அழிந்து விடுகின்றது. உலகில் தோன்றிய ஆணாக, பெண்ணாக, அலியாக, மண்ணாக, ஆதிநாதம் நிறைந்த விண்ணாக அனைத்து வேறுபட்ட வடிவங்களிலும் அவன் ஒருவனே கலந்திருக்கின்றான். உருவங்கள், வடிவங்கள் வேறுபட்டு இருப்பினும் அனைத்திலும் அவன் ஒருவனே கலந்திருக்கின்றான். வரையறுக்கின்ற எல்லைக்குட்பட்ட பொருள்களில் மட்டுமல்ல! எல்லாவற்றையும் கடந்து விரிந்து நின்கின்றான். விரும்புவார் மனத்திற்கு ஏற்ப,

விரும்பும் வடிவத்தில் கண்ணார் அமுதமாய்க் காட்சி தருகின்றான் என்று உணர்த்துகிறது இத்திருப்பாடல்.

அண்ணா மலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீறற்றார்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்,
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே! இப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்!

-(மதுரை வானொலியில் ஒலிபரப்பானது)

அன்பான வேண்டுகோள்!

சமுதாய மாமுனிவராகத் திகழ்ந்த நமது அருள்நெறித்தந்தை தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் ஆழமான சிந்தனைகளை அடியொற்றி நடைபோடும் “மக்கள் சிந்தனை” மாத இதழ் மேலும் பலம் பெறுவதற்குத் தங்களின் ஆதரவு தேவை. நமது கருத்து பரவலாக மக்களைச் சென்றடைய இதழ் அவசியம்.

ஆயுள் சந்தாவாகவோ, அல்லது ஆண்டுச் சந்தாவாகவோ அல்லது புரவலர் தொகையாகவோ மக்கள் சிந்தனை இதழுக்கு வழங்கி மக்களின் சிந்தனைகளை அகம்கொண்டு வெளிவர உதவுங்கள். “மக்கள் சிந்தனை”யின் பணி சிறப்புடன் தொடர வாசகராக, படைப்பாளராக சந்தாதாரராக விளம்பரதாரராக மாறுங்கள்; இன்றே சமய சமுதாயப் பணியை வலிமைப்படுத்துங்கள்.

-ஆசிரியர்

அருளாலய மழைநீர்

(தமிழாகரர் தெ. முருகசாமி, காரைக்குடி)

(அறுசீர்)

கடவுளைக் கண்ட துண்டா?
கண்டவர் விண்ட துண்டா?
திடமான கருத்திற் கேற்ற
தெளிவினைக் கொள்ள வேண்டி
இடமான ஒன்றைத் தேடி
இத்தரை அலைந்த போது
தடமான ஒன்றைக் காட்டத்
தவத்திரு அடிகள் வந்தார்!

(எண்சீர்)

காவியுடை வெண்தாடி திருவெண் ணீறு
கட்டியநல் தலைப்பாகை கனிந்த பார்வை
ஆவிதனை ஈர்க்கின்ற அரிய பேச்சு
அத்தனையும் அவரிடந்தான் இருந்த தாலே
தாவியேநாம் இவரிடந்தான் வினவிக் கேட்டால்
தகுந்தவிடை கிடைக்குமெனத் தலைவ ணங்கிப்
பூவிலமர் வண்டாகச் சுற்றி ஒன்றைப்
புகன்றதற்குப் பகர்ந்தவிடை சொல்லக் கேளீர்!

(அறுசீர்)

அய்யன்திரு வள்ளுவர் செய்த
அருந்தமிழ் அதிகா ரத்தில்
மெய்ப்பொரு ளாகக் கூறும்
மெலிவிலாக் கடவுள் வாழ்த்தில்
உய்த்திட்ட ஒன்பான் பாட்டில்
உணர்ந்திடும் எண்கு ணந்தான்
பொய்யிலாக் கடவு ளுக்குப்
புகன்றிடும் வடிவென் றாரே!

எட்டுகுணம் பற்றி இந்த
ஏழுலகம் மொத்த மாகச்
சட்டென்று உணர்ந்து கொள்ளச்
சாற்றுவீர் சான்றொன் றென்றேன்,
கொட்டுகின்ற மழையைக் காட்டிக்
கூறிய பதிலைக் கேட்டு
மட்டில்லா மகிழ்ச்சி கொண்டேன்
மாரியையும் கும்பிட் டேனே!

கூறிடும் கடவுள் பேதம்
குவலயத்தில் கோடி என்றே
தேறிடும் போது அந்தோ
தெளிவிலா மயக்கத் தாலே
மாறிடும் உலகந் தன்னில்
மதித்திடும் கடவுள் காண
வேறிடம் செல்ல வேண்டாம்
வெளிறிய மேகந் தானே;

ஆடியில் அடிக்கும் காற்றால்
அசைந்தாடி கடலில் சென்று
ஓடியே படிந்து, ஆங்கே
உவர்ப்பினைக் கொள்ளா தாகி
தேடியே செல்வந் தன்னைத்
திக்கற்றோர்க் களித்தல் போல
நாடிய உலகோர்க் கெல்லாம்
நல்மழையாய்ப் பெய்விக் கும்மே!

வான்சிறப் பென்றே இஃதை
வள்ளுவர் கடவுள் வாழ்த்தாம்
தேன்முதல் அதிகா ரத்தைத்
திருப்பியதும் வைத்தா ரென்றால்
ஆனுடல் பரவிய பாலை
அதன்காம்பில் கொள்ளல் போல
வானுறும் மழையே நம்மால்
வணங்குறும் இறையென் றாரே!

காலத்தில் பெய்யும் அந்தக்
கனமழை தன்னை மூன்று
காலத்தும் உள்ள அந்தக்
கடவுளாய் காட்டல் தானே
சாலவும் ஒவ்வா தென்று
சற்றுநான் மருகி நிற்க
சீலமாய்ச் சொன்னார் தெய்வச்
சிகாமணி வார்த்தை யாலே!

எங்கெங் கிறையிருந் தாலும்
எய்ப்பினில் வைப்பே, என்றும்
வங்கியில் வைப்ப தெல்லாம்
வருங்கால சேமிப் பேபோல்
பொங்கிடும் மேகந் தன்னால்
பொழிகின்ற மழைநீ ரைத்தான்
தங்கிடும் சேமிப் பாகத்
தரையினை அகழ்ந்து நாமும்;

நீர்த்தொட்டிக் கட்டி வீட்டில்
நிலையாகச் சேமித் திட்டால்
கார்தட்டும் போதும் நாட்டில்
கனமழை பொய்க்கும் போதும்
மார்தட்டி வாழ வைக்கும்
மழைநீர்தான் கடவுள் என்றே
ஆர்ப்பரித்த அடிக ளாரை
அருளாலய மழைநீ ரென்பேன்!

வேண்டுகோள்!

“ஆனஞ்சு எவை” - விவாத மேடைக் கட்டுரை ‘புரட்டாசி’ இதழுக்கு யாரிடத்தும் இருந்தும் வரவில்லை. அடுத்த இதழுக்கு எதிர்பார்க்கப்படுகிறது.

- ஆசிரியர்

அண்ணல் காந்தியடிகள்

(தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்)

அக்டோபர் திங்கள் அண்ணல் காந்தியடிகள் அவதரித்த திங்கள். காந்தியடிகள் பிறந்த தினத்தை ஆண்டுதோறும் அக்டோபர் 2 ஆம் நாள் கோலாகலமாகக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம். மகாத்மாவின் விரல்கள் நூற்ற நூல்தான் பாரதத் தாயின் அடிமைத் தளையை அறுத்து எறிந்தது!

"வாழ்க,நீ எம்மான்! இந்த
வையத்து நாட்டி லெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசம் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மகாத்மா! நீ வாழ்க! வாழ்க!"

என்று பாரதி மகாத்மாவைப் பற்றி முழங்கினானே! சத்தியத்தைக் கவிதையாய்ப் பாடும் பாரதியும் சத்தியமே வாழ்க்கையாய் வாழ்ந்து கொண்டிருக்கும் மகாத்மாவும் சந்தித்துக் கொள்கின்றார்கள். மகாத்மாவைப் பார்த்து, பாரதி கேட்கின்றான். "மிஸ்டர் காந்தி! இன்று திருவல்லிக்கேணிக் கடற்கரையில் ஒரு கூட்டம், அதற்குத் தலைமை தாங்க வேண்டும்!" - என்று! தம் நாள்வழி நிகழ்ச்சிகளைச் சரிபார்த்துவிட்டு, "கூட்டத்தை நாளை வைத்துக்கொள்ள முடியுமா? என்று காந்தி கேட்கின்றார். ?சரி மிஸ்டர் காந்தி! இன்றுதான் அந்தக் கூட்டம் நடைபெறும். பரவாயில்லை நீங்கள் தொடங்கிய இயக்கத்தை நான் ஆசீர்வதிக்கின்றேன்" என்று கூறிவிட்டு, பாரதி சிங்க நடையிட்டுச் செல்கின்றான். மகாத்மா அருகிலிருப்பவரிடம் இவர் யார்? என்று கேட்க, "இவர்தான் எங்கள் தேசியக் கவி" என்று பகர்ந்தனர். "இவர் பாதுகாக்கப்பட வேண்டியவர். பத்திரமாகக் கவனித்துக் கொள்ளுங்கள்!" என்று மகாத்மா கூறினார். நாமோ பாரதியையும் பாதுகாக்கத் தவறிப்போனோம்! மகாத்மாவையும் காக்கத் தவறிப் போனோம்! ஒரு கவிஞன் வேதனையோடு சொல்கின்றான்.

"இந்த மனிதாத்மாக்களைப் பார் மகாத்மா!
உன்னையே உருக்கி
நீ ஒரு சுதந்திர மோதிரம் செய்து கொடுத்தாய்!
அணியும் பொழுதுதான் அறிந்து கொண்டோம்
இவர்கள் விரல்களே இல்லாத
தொழுநோயாளர்கள் என்று!"

என்று!

நாட்டை உணராத தலைமுறை இன்று வளர்ந்து கொண்டிருக்கிறது! "இந்தியாவின் முதுகெலும்பு கிராமங்கள்" என்றார் மகாத்மா! இன்னமும் கிராமங்களில் வறுமை, ஏழ்மை, கல்லாமை, தீண்டாமை அகன்ற பாடில்லை.

சாதீயப் பிரச்சனைகளில் கிராமப்புறங்கள் சிக்குண்டு சீரழிந்து கொண்டிருக்கின்றன. வறுமையும், ஏழ்மையும் வாட்டி வதைக்கின்றன. சமத்துவபுரங்கள் ஆங்காங்கு தோன்றினால் மட்டும் போதாது. ஒட்டு மொத்தக் கிராமங்களும் சமத்துவபுரங்களாக மாறவேண்டும்! மதவெறி கட்டுக்கு அடங்காது அகோர தாண்டவம் ஆடுகின்றது. காந்தியடிகள் கண்ட அகிம்சை முறைக்கு எதிரான வன்முறைதான் இன்று தலைதூக்குகின்றது. எல்லாச் சமயங்களும் அன்பைத்தான் வலியுறுத்துகின்றன. எந்தச் சமயமும் பகையை, வெறுப்பை, வன்முறையை வளர்க்க வற்புறுத்தவில்லை. உண்மையான சமய நெறியாளர்களும் அன்பை, அகிம்சையை, சத்தியத்தைத் தான் விதைத்தனர். சமயத்தின் போர்வையில் இயங்குகின்ற சில சுயநல சமூக விரோத சக்திகள் தான் வேறுபாடுகளைப் பெரிதுபடுத்தி, முரண்பாடுகளை உருவாக்கி மனித சமூகத்தில் மிகப்பெரிய பிளவினை உண்டுபண்ணுகின்றனர்.

வாடிய பயிரைக் கண்டபொழுது வாடுவதுதான் உண்மையான அருள் உள்ளம். அந்த அருள் உள்ளத்தோடுதான் மகாத்மா போராடினார். புறப்பகையாகிய வெள்ளையரை எதிர்த்துப் போராடி வெற்றி பெற்றார். அகப்பகையாகிய கல்லாமை, இல்லாமை, தீண்டாமை முதலியவற்றை வேரறுக்க முடியாமல் தோற்றுப்போனார். வெள்ளையரை வென்ற காந்தி பெருமான் நம்மிடம் தோற்றுப் போனார்! சுதந்திர இந்தியாவை நமக்குப் பரிசாகத் தந்த மகாத்மாவிற்கு நாம் தந்த பரிசு வெறும் துப்பாக்கிக் குண்டுகள் மட்டுமே! காந்தி தோற்றுப் போனால் பரவாயில்லை! காந்தியம் தோற்றுப் போகாமல் காப்போம்! அதுவே தேசத்திற்கும் காந்தி பெருமானுக்கும் செய்கின்ற உண்மையான அஞ்சலியாகும்.

-(மதுரை வானொலியில் ஒலிபரப்பானது)

பெரியபுராணச் சிந்தனைகள்

(புலவர். **க. சண்முகம்**, மதுரை)

உலக இருள் நீக்கி ஒளிபரப்பும் செங்கதிரவன் போல், மன இருள் அகற்றும் பெரிய புராணத்துள் திட்ப நுட்பங்களைப் பல இடத்தும் காணலாம். அப்பூதியடிகள் புராணத்துள் அறிமுகம் செய்யும் சேக்கிழார் பெருமான்,

களவுபொய் காமம் கோபம் முதலிய குற்றம் காய்ந்தார்
வளமிகு மனையின் வாழ்க்கை நிலையினார் மனைப்பால் உள்ள
அளவைகள் நிறைகோல் மக்கள் ஆவொடு மேதி மற்றும்
உளவெல்லாம் அரசின் நாமம் சாற்றும் அவ்வொழுக லாற்றார்

(அப்பூதியடிகள் புரா - 2)

திருநாவுக்கரசர் - பால் மிகுதியும் ஈடுபாடு கொண்ட அப்பூதியடிகளின் பண்பு நலன் சிறப்பாக ஈண்டு சொல்லப்பெற்றது. களவு, பொய், காமம், கோபம் முதலிய நான்கின் குற்றம் நீங்கப்பெற்றவர் அப்பூதி அடிகள். திருநாவுக்கரசர், அப்பூதியடியடிகளைச் சந்தித்து உரையாடும் பொழுது, "நீவீர் வைத்துள்ள தண்ணீர்ப் பந்தலில் நும் பேர் எழுதாதே வேறொரு பேர் முன் எழுதக் காரணம் என் கொல்" என வினவினார். வந்திருப்பவர் திருநாவுக்கரசர் என்பதை அப்பூதியடிகள் அறிந்திலர். திருநாவுக்கரசரைப் பெருமைப்படுத்திப் பேசாமல், "வேறொருபேர்" என்று சொல்லியமை கேட்டு அப்பூதியடிகள் வெகுண்டார்.

நின்ற மறையோர் கேளா நிறையழிந்த சிந்தையராய்
"நன்றருளிச் செய்திலீர்? நாணில்அமண் பதகருடன்
ஒன்றிய மன்னவன் சூழ்ச்சி திருத்தொண்டின் உறைப்பாலே
வென்றவர் தந்திருப்பேரோ வேறொருபேர் எனவெகுள்வார்.

(அப்பூதியடிகள் புரா - 13)

வெகுள்தல் கோபத்தின் பாற்பட்டதே. அறிமுகப்படுத்திய கூற்றுக்கும் நடைமுறைச் செயலுக்கும் பொருந்துமாறில்லையே என்று பலர் நினைக்கக்கூடும். இப்படி ஒரு நிகழ்வு இருக்கும்பொழுது அப்படி ஒரு அறிமுகம் செய்வானேன்?

கோபம் உயிர்க்குணங்களுள் ஒன்று. அக்கோபம் தற்காப்புக் கருவியாகச் சில சமயம் அமைவதுண்டு. அதனால்தான் இயற்கை கோப உணர்ச்சியைக் கொடுத்துள்ளது. குணமென்னும் குன்றேறி நின்றாரும் வெகுள்வதுண்டு.

'காதல காதல் அறியாமை உய்க்கிற்பின்
ஏதில ஏதிலார் நூல்' (குறள் 440)

என்ற குறட்பாவிற்கு விளக்கம் செய்யும் பரிமேலழகர், 'காமம், வெகுளி, உவகை முற்றக் கடியும் குற்ற மன்மையின்' என்றுரைக்கின்றார்.

கோப உணர்ச்சி அறவே கூடாது என்பது இயல்புக்கு மாறுபட்டதாகும். அந்த உணர்ச்சி அறிவுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும். கோப உணர்ச்சிக் காலத்தும் அறிவு மேம்பட்டு இருக்குமாயின் குற்ற நிகழ்வுகள் நிகழா. "கோபத்தில் அறிவில்லாமல் பேசிவிட்டேன், அல்லது செய்து விட்டேன்" என்று பின்னிரங்குவோர்களைப் பரவலாகக் காணலாம். அறிவை அழிக்கும் கோபமே கொலை போன்ற வன் செயல்களுக்கு வித்தாகின்றது.

அறிவு மேம்பட்ட சான்றோர்களிடத்து கோபம் அடங்கி நிற்கும். அதனால் குற்றங்கள் விளையா. பொருந்தாச் சொற்கேட்ட அப்பூதியடிகள் வெகுண்டார். அந்த வெகுளி அறிவுக்கு உட்பட்டிருந்தது. அதனால், சொற் குற்றமோ, செயற் குற்றமோ நிகழவில்லை. "நன்றருளிச் செய்திலீர்" என்ற பண்புச் சொற்களே

வெளிப்பட்டன. இதனால் அப்பூதி யடிகள் கோபத்தானாகிய குற்றம் நீங்கினார்.

களவு, பொய், காமம், கோபம் ஆகிய காய்ந்தார் என்று சொல்லாமல், இவற்றால் ஆகும் குற்றம் நீங்கினார் என்றே சேக்கிழார் பெருமான் ஆழ்ந்த நுட்பமுடன் அருளிச் செய்தார்.

இவ்வாறாயின் ஏனைய மூன்றின் குற்றம் நீங்கியவாறு இவ்வரலாற்றில் உளவோ? உள.

"வளமிகு மனையின் வாழ்க்கை நிலையினார்" என்றமையின், முறையான இல்வாழ்வும் மக்கட்பேறும் உடைமையின், காமத்தானாய குற்றம் நிகழுமாறில்லை.

இலை அரிந்து வரச்சென்ற மூத்த திருநாவுக்கரசு அரவு தீண்டியமையால் ஆவி சோர்ந்தார். வந்த அடியார் உண்ணத் தடையாகுமேயென்று அந்நிகழ்வை அப்பூதியடிகள் மறைத்தார்.

'பெறலரும் புதல்வன் தன்னைப் பாயினுட் பெய்து மூடி
புறமனை முன்றில் பாங்கோர் புடையினில் மறைத்துவைத்தே'

(அப்பூதியடிகள் புரா - 29)

மறைத்தலும் களவின் பாற்பட்டதே.

"கரப்புக் கட்டல் பட்டிமை சோர்வு
கயவு, படிறு கரவடம் களவே"

(பிங்கலநிகண்டு 1905)

'கரப்பு' என்பதன் பொருள் "களவு" என அகரமுதலியில் காணலாம்.

'களவு' எனும் சொற்கேட்டுக் களவு தீதென்பதூஉம்
'காமம்' எனும் சொற்கேட்டுக் காமம் தீதென்பதூஉம்
'அன்று' மற்று அவை நல்ல ஆமாறும் உண்டு.

(இறையனார் களவியல் உரை - முதற்சூத்திரவிளக்கம்)

ஆகவே, வந்திருக்கும் அடியார் உண்ண வேண்டும் என்ற நன்னோக்கில் செய்யப்பட்ட "மறைத்தல்" களவின்பாற் பட்டதாயினும் "நன்கு தரு களவு" எனும் வகைப்பட்டமையால் அப்பூதியடிகள் களவினாலாய குற்றம் நீங்கப்பெற்றார்.

திருநாவுக்கரசர் திருநீறு சாத்த மூத்தப்பிள்ளையை அழைக்குமாறு அப்பூதியடிகளை வேண்டினார். நடந்தவற்றைக் கூறாமல், "இப்போது இங்கு அவன் உதவான்" என்று உண்மை பயக்கக் கூறினார்.

ஆதிநான் மறைநூல் வாய்மை அப்பூதியாரை நோக்கி
காதலர் இவர்க்கு மூத்த சேயையும் காட்டு முன்னே
மேதகு பூதி சாத்த என்றலும் விளைந்த தன்மை
யாதுமொன்றுரையார் 'இப்போதிங்கவன் உதவான்' என்றார்.

(அப்பூதியடிகள் புரா - 32)

கேட்கப்பட்ட வினாவிற்கு "விளைந்த தன்மை யாது மொன்றுரையார்" என்னுமிடத்து உண்மைக்கு மாறுபட்ட பொய்மை மனத்தளவில் மறைந்து நின்றது. ஆயினும் வந்த அடியார் உண்ணுதல் வேண்டும் என்னும் நன்மை நோக்கியமையால், அப்பூதியடிகள் பொய்மையின் குற்றம் நீங்கினார்.

"பொற்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்" (குறள் 292)

என்பது வள்ளுவர் வாக்கன்றோ.

அறிமுகப் படுத்தும் ஓரடியாலே வாழ்வியல் அறத்தைத் திட்பமாகவும் நுட்பமாகவும் காட்டியுள்ள திறம் நோக்கின் சேக்கிழார் பெருமானின் தெய்வத்தன்மை விளங்கும்.

சிந்தனை வட்டம்

வணக்கத்திற்குரிய அருள்தந்தைக்கு,

வணக்கம். மக்கள் சிந்தனை ஆடி 2034 இதழின் தலையங்கம் சிறப்பாக அமைந்திருக்கிறது. அதில் "உருக்குலைந்த உயிர்க் குலத்தின் துன்பமே மனிதப் புனிதர்களை உருவாக்குகின்றது" என்னும் வரிகள் என்னை மிகமிகக் கவர்ந்தன. மண்ணிலிருந்து விண்ணுக்கு உயரும் ஆன்மிகத்தின் அடிப்படையை இரண்டு வரிகளும் மிக அழகாகச் சொல்லுகின்றன.

ஆனஞ்சு கட்டுரையும் (முந்திய இதழும் இந்த இதழும்) கூர்மையானது. பசு பற்றிய இருவிதப் பார்வையை அருமையாக விளக்குகிறது. புலவர் கதிரேசனைப் பாராட்டுகிறேன்.

–எழுத்தாளர் **பொன்னீலன்**

தனக்குத் தகுதியுடையதல்லாத ஒன்றைக் குறுக்கு வழிகளில் – முறைகேடான வழிகளில் அடைய முயல்வதற்கு ஆசை என்று பெயர். நன்றாக உழைத்து, உழைப்பால் உறுபொருள் ஈட்டினால் அப்பொருள் அச்சத்தைத் தராது; இன்பத்தைத் தரும்.

–அருள்நெறித்தந்தை

(நன்றி : பாரதி ஒரு யுகசந்தி)

பிழை திருத்தம்

ஆவணி இதழில் சான்றோர் சிந்தனை எனும் கட்டுரையில் 24 ஆம் பக்கத்தில் இடம்பெற்றுள்ள திருக்குறள் முதலடியில் "உழைப்பதூஉம் உண்பதூஉம்" என்று பிழையாக அச்சாகியிருக்கிறது. அதை "உடுப்பதூஉம் உண்பதூஉம்" என்று திருத்திக்கொள்ள வேண்டுகிறோம்.

இப்பிழையை எடுத்துக்காட்டி ஆசிரியருக்கு எழுதியுள்ள பாவலர் மணி திரு. ஆ. பழனி அவர்களுக்கு நன்றி.

-ஆசிரியர்



பிரதமர் வாஜ்பாய்க்கு உலகத் தமிழரின் வேண்டுகோள்!

(புலவர். **வீ.செ. கந்தசாமி**, ஐ.ஆர்.எஸ்.(ஓய்வு))

நடுவணரசு, தமிழைச் செவ்வியல் மொழியாக அறிவிக்கக் கோரி, நூற்றுக்கும் மேற்பட்ட தமிழறிஞர்கள், 19-8-2003 ஆம் நாள், புதுதில்லியில், நாடாளுமன்றத்திற்கருகில், உண்ணா நோன்பிருந்தனர். அப்போது, கட்சி வேறுபாடின்றி, தமிழகத்தைச் சார்ந்த அனைத்துக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களும், நடுவணரசின் அமைச்சரவையில் பங்கேற்றுள்ள தமிழக அமைச்சர்களும், உண்ணா நோன்பிருந்தவர்களைச் சந்தித்து, தமிழ் செவ்வியல் மொழிக் கோரிக்கையினை வலியுறுத்தியும், இது குறித்துத் தங்கள் ஆதரவைத் தெரிவித்தும் உரையாற்றினர். நாடாளுமன்றத்திலும் இது குறித்துக் குரல் எழுப்புவதாகக் கூறினர். மாண்புமிகு அமைச்சர் கண்ணப்பன் அவர்கள் உண்ணா நோன்பைத் துவக்கி வைத்தார். மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. மோகன், இனி வருங்காலத்தில், நாடாளுமன்றத்தில் தமிழில் மட்டுமே தாம் பேசுவதாக உறுதியளித்தார்.

தமிழ் செவ்வியல் மொழிக் கோரிக்கையை வலியுறுத்தி, தமிழறிஞர்கள் தில்லியில் உண்ணா நோன்பிருந்த 19-8-2003 ஆம் நாளன்று, நாடாளுமன்றத்தில், ஆளுங் கூட்டணிக்கட்சிகளுக் கெதிராக, நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு, அத்தீர்மானத்தின்மீது விவாதம் நடந்து கொண்டிருந்தது. அதற்கடுத்தநாள், அத்தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு அறிவிக்கப்பட்டிருந்தது. ஆகவே, அன்றைய நாள், எல்லா அமைச்சர்களும், எல்லாக் கட்சிகளைச் சார்ந்த, மக்களவை உறுப்பினர்களும், அவையில் இருக்க வேண்டிய கட்டாயம் அறிவிக்கப்பட்டிருந்தது. அப்படியிருந்தும், நாடாளுமன்றத்தின்

எல்லா உறுப்பினர்களும், தமிழகத்தைச் சார்ந்த அனைத்து அமைச்சர்களும், உண்ணா நோன்பிருந்த போராளிகளைச் சந்தித்து, ஆதரவு தெரிவித்து, உரையாற்றியது தமிழ் செவ்வியல் மொழிக் கோரிக்கைக்குத் தமிழ் மக்களின் ஒருமித்த கருத்தைப் பிரதிபலிக்கிறது.

பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தேசியத் தலைவர்களில் ஒருவரும், செயலாளருமான திரு. இல. கணேசன் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் சு. திருநாவுக்கரசர் அவர்களுடன் வந்து உண்ணா நோன்பில் கலந்துகொண்டு கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்து உரையாற்றினார். அவர் உரையாற்றுகையில், எதிர்க் கட்சிகள், தமது அரசின் மீது கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது நடக்கும் விவாதத்தின் போது, சாட்டும் குற்றச்சாட்டுகளுக்குப் பதில் சொல்வதற்காகச் சக அமைச்சர்களுடன் கலந்துரையாடும் அந்த இக்கட்டான நேரத்திலும் கூடப் பிரதமர் வாஜ்பாய் அவர்கள், அமைச்சர் திருநாவுக்கரசருடன், தம்மையும் தம்முடன் சிலரையும் அழைத்து, தமிழ் செவ்வியல் மொழிக் கோரிக்கை ப்ற்றிக் கேட்டறிந்தார் என்றும், தமிழின் தொன்மை, இலக்கிய இலக்கண வளமை, தனித்தியங்கும் வன்மை, இன்றும் வழக்கில் இருந்து வரும் அதன் இளமை ஆகியன பற்றி அவர்கள் கொடுத்த விளக்கங்களைப் பொறுமையோடு கேட்ட பிறகு, "உங்கள் கோரிக்கையில் நியாயம் இருக்கிறது" (There is justification in your demand) என்று பிரதமர் கூறியதாகவும், தெரிவித்தார். இக் கோரிக்கையை வலியுறுத்த, நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ் அறிஞர்கள் உண்ணா நோன்பிருந்து தங்களை வருத்திக்கொள்வது தமக்கு வேதனையளிக்கிறது என்றும் பிரதமர் குறிப்பிட்டதாக திரு. இல. கணேசன் கூறினார்.

தமிழைச் செவ்வியல் மொழியாக அறிவிக்க வேண்டும் என்பதில் நியாயம் இருக்கிறது என்று இந்தியப் பிரதமரே கூறிய பிறகும், அவ்வாறு அறிவிக்க நடுவணரசு இன்னும் ஏன் தயக்கம் காட்டுகிறது என்பதுதான் புரியாத புதிராக உள்ளது.

அண்மையில், அயோத்தியில் கோயில் கட்டும் பிரச்சினை குறித்து, பிரதமர் வாஜ்பாய் அவர்களுடைய கருத்து, அடிக்கடி மாறுபட்டு வருவதைச் சுட்டிக்காட்டிய எதிர்க்கட்சித் தலைவர் திருமதி. சோனியாகாந்தி, பிரதமர் இந்தப் பிரச்சினையில் யாரோ சிலருடைய எதிர்ப்புகளுக்கு ஆளாகியுள்ளதாகக் கூறினார். அந்தக் கூற்றைச் சற்று வேகமாகவே மறுத்த பிரதமர், "எதிர்ப்பா? எனக்கா? இருக்கமுடியாது! என் அரசியல் வாழ்க்கையில், நான் எப்போதும் எதிர்ப்புகளைப் பொருட்படுத்தியதில்லை", என்று முழங்கினார். அப்படியானால், தமிழ் செவ்வியல் மொழி என்ற தமிழர்களின் கோரிக்கையில் நியாயம் இருப்பதாகக் கூறும் பிரதமர், ஏன் அதுபற்றிய அறிவிப்பைத் தள்ளிப்போடுகிறார்? இதில் என்ன தயக்கம்? நியாயமான கோரிக்கைகளைச் செயல்படுத்துவதில் ஏற்படும் எதிர்ப்புகளுக்குப் பிரதமர் அடிபணியாதவர் என்று உலகெங்கிலுமுள்ள தமிழர்கள் உறுதியாக நம்புகிறார்கள். ஆகவே, உலகத் தமிழர்களின் ஒட்டுமொத்த இதய தாகமான, தமிழ் செவ்வியல் மொழி என்ற அறிவிப்பை, நடுவணரசு உடனே வெளியிட்டு நியாயம் வழங்க வேண்டும். இத்தகைய அறிவிப்பு, இந்திய நாட்டின் இறையாண்மையைப் பேணவும், ஒருமைப்பாட்டை மேலும் வளர்க்கவும் துணை செய்யும்.

—

கவலை ஆக்கப் புனைவுடன் வரும். ஆனால், புனைவுதான் ஆக்கம்; விளைவு அழிவு. வாழ விரும்புகிறவர்கள் இதனை அறிந்துகொள்ள வேண்டும். நெஞ்சிற் கவலை நிதமும் பயிராக்காமல் புத்துணர்வுடன் வைத்துக்கொள்ள வேண்டும். ஒரு சிறு துளியாகக் கவலை வந்தாலும் அதனை வரவேற்கக் கூடாது. கவலை சென்ற கால நிகழ்வுகளை வாயிலாகக் கொண்டு வரும்; கவலை சென்ற கால நிகழ்வுகளை எண்ணி வருந்தும்படி கற்றுக்கொடுக்கும். வீழ்ந்து விடுதல் பெரிய துன்பமன்று. இழப்பையும் கூட அவ்வளவு பெரிதாகத் தந்துவிடாது. ஆனால், வீழ்ந்ததைப் பற்றி எண்ணிக் கவலைப்படுதல் வீழ்ச்சியைப் பலவாக்கும்; ஆக்கத்தின் வாயில்களைத் தூர்த்துவிடும்; சோர்வே மிஞ்சும்; பிழைப்பறியா நிலையில் கணியனை நாடச் சொல்லும்.

-அருள்நெறித்தந்தை

(நன்றி : பாரதி ஒரு யுகசந்தி)

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

பாரதி பத்து

(கவிஞர். ஆ. குறள்பித்தன்)

அன்னசத்திரம்
ஆயிரம் நாட்டிடும்
ஆசையை நீக்கச் சொன்னான்!
ஆங்கோர் ஏழையும்
அறிவினைப் பெறக்கல்வி
ஆலயம் கட்டச் சொன்னான்!

உன்னதக் குறளை
ஓதி உணர்ந்துமே
உயர்ந்திட வேண்டுமென்றான்!
உணவின்றி ஒருவன்
ஓலமிடக் கண்டால்
உலகினை ஒழிப்போமென்றான்!

அன்னைத் தமிழிலே
அந்நியச் சாத்திரம்
ஆக்கிட வேண்டுமென்றான்!
ஆயிரம் பிரிவுகள்
அடைந்திட்ட போதிலும்
அனைவரும் ஓர்சாதியென்றான்!

சின்னஞ்சிறு கதை
செப்பல் போதும்புதுச்
சிந்தனை வேண்டுமென்றான்!
சென்றது மீளாது
செயல்பட வேண்டினான்!
கவிசுப்ர மண்யபாரதி!

ஆலைகள் தோன்றிட
அறிவியல் வளர்ந்திட
அறைந்த விஞ்ஞானியவன்!
ஆனந்த சுதந்திரம்
அடைந்து விட்டோமென்று
அறிந்தமெய் ஞானியவன்!

சாலைகள் போட்டிடச்
சமத்துவம் கண்டிட
சிந்திக்கச் சொன்னானவன்!
சிங்களத் தீவுக்கே
சீர்பாலம் கட்டிடும்
செய்தியும் சொன்னானவன்!

சோலைக் குயிலோடு
சிறுகுருவி காக்கையும்
சொந்தமெனச் சொன்னானவன்!
சுரந்திடும் பாற்பசுவோடு
சுற்றிவரும் நாய்பிறவும்
சுகம்பெற விழைந்தானவன்!

காலை படிப்பென்றும்
கதிர்சாயக் களிப்பென்றும்
குழந்தைக்குச் சொன்னானவன்!
கன்னித் தமிழ்த்தாயின்
கருவில் திருவானவன்
கவிசுப்ர மண்யபாரதி!

நாட்டின் நிலைகண்டும்
நீசர்செயல் கண்டும்
நெஞ்சம் பொறுக்காதவன்!
நிலைகெட்ட மாந்தரை
நல்லவ ராக்கிட
நேரம் கிடைக்காதவன்!

மேட்டுக் குடியினிற்
மூட்டிடும் தீண்டாமை
மூழ்கிடத் துடித்தானவன்!
மூடரின் பேய்க்குணம்
மண்மூடிப் போய்விட
முதல்வனைத் தொழுதானவன்!

வாட்டும் மதபேதத்தை
வஞ்சக மனத்தோரை
வாழ்வித்தல் தீமையென்றான்!
வற்றாத அன்பும்
வாடாத நட்பும்
வளர்ந்திட வேண்டுமென்றான்!

கூட்டாக வாழ்ந்திடக்
கூடியே மகிழ்ந்திடக்
கூவியே அழைத்தானவன்!

குன்றாத புகழுடைய
குன்றின் விளக்கான
கவிசுப்ர மண்யபாரதி!

பாரதம் என்பது
பழம்பெரும் நாடென்று
பாருக்குச் சொன்னானவன்!
பாஞ்சாலி சபதத்தில்
பாண்டவர் செயலினைப்
படுமோசம் என்றானவன்!

பூரதம் போலுள்ள
பெண்மைக்கு எப்போதும்
பெருமையே தந்தானவன்!
பூகம்பம் மாய்விடும்
பூவையர் சினம்என்றே
பாடமே சொன்னானவன்!

கூரான அறிவோடு
கடமைகள் ஆற்றிடக்
கீதையுரை சொன்னானவன்!
குன்றாத வலிமையைக்
கொடு என்று கடவுளைக்
கும்பிட்டுக் கேட்டானவன்!

ஊர்தோறும் பள்ளிகள்
உருவாக வேண்டுமென
உண்மையாய் நினைத்தானவன்!
உள்ளத்தில் உள்ளதை
உள்ளபடி உரைத்தவன்
கவிசுப்ர மண்யபாரதி!

என்று பிறந்தது
இன்பத் தமிழென்று
எண்ணியே வியந்தானவன்
எங்குமே வள்ளுவன்
இளங்கோவோ கம்பனோ
இல்லைஎனக் கணித்தானவ்ன்!

கன்றுகள் மேய்த்திடும்
கண்ணனை நண்பனாய்
காதலியாய்க் கண்டானவன்!
கடவுளாம் கண்ணனின்
கடமையைச் சேவையைக்
காணுங்கள் என்றானவன்!

தின்று தின்று வெறும்
தேகம் வளர்ப்பது
தீமையே என்றானவன்!
தேசத்தை மீட்டிடத்
தீவிரம் காட்டாதார்
தொலையட்டும் என்றானவன்!

நன்று நமக்கெல்லாம்
நெஞ்சில் நிலைக்கவே
நீதிகள் சொன்னானவன்!
நாமெல்லாம் இந்திய
நாட்டினர் என்றானே!
கவிசுப்ர மண்யபாரதி!

செயலாற்றும்போது முழு மனத்துடன் செயலாற்ற வேண்டும். உச்ச நிலையிலான மாபெரும் வெற்றிகளைப் பெற்றவர்கள் எல்லாரும் முயற்சியில் குறையாது முழுமனத்துடன் செயலாற்றியுள்ளதால்தான் வெற்றி பெற்றார்கள்.

சூரிய ஒளியை ஒருமுகப்படுத்தும்பொழுது - குவிக்கும் பொழுது அதன் ஆற்றல் பேராற்றலாக வெளிப்படுவதுபோல நம்முடைய செயலின்மீது கவனத்தை ஒருமுகப்படுத்தினால் செயலில் வெற்றியடைவது சிரமம் இல்லை - எளிது.

மனிதவள மேம்பாட்டுக்குரிய மிகச் சிறந்த வாயிலாகிய செயற்படுதல் ஒரு வேள்வி. அது தன்னம்பிக்கை, தன்னலமறுப்பு, பொதுநல உணர்வு, உயர்ந்த குறிக்கோள், பிறரையும் தம்போல் மதித்தல், யாருக்கும் தீது செய்யாமை என்று அமையுமானால் அது ஓர் உயர்ந்த இலட்சியம். அது நாம் நோக்கிய பயனைத்தரும். அப்படிப்பட்ட தொண்டினைத்தான், மனித சமூகத்தின் வளர்ச்சிக்குப் பலரும் - அர்ப்பணித்துள்ளார்கள். நாமும் உயர்ந்த இலட்சிய வீரர்கள் காட்டியுள்ள பாதையில் செயற்பட்டு, மனித இனம், வளர்ச்சியை - மேம்பாட்டை அடையச் செய்வோம்.

-பொன்னம்பல அடிகளார்

(நன்றி : சமய வாழ்வு)

பதிவு எண் : TN/SP/KKD-01/2003-2005 [illegible] ம்பர் / 2003. வெளியீட்டு நாள் 20.09.2003



பெறுநர்

ஆதீனகர்த்தர்
கோவிலூர் ஆதீனம்
கோவிலூர் - (POST)
காரைக்குடி - (VIA)

அச்சிட்டோர் : சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி. ✆ : 264166